DIOCESE OF TIRUNELVELI

# BETHESDA C.S.I. TAMIL CHURCH

PUNE

# பெதஸ்தா பேசுகிறது

## GOD’S PROMISE FOR THIS MONTH

*அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான். - யோவான் 16:22*

## MESSAGE FOR THE MONTH

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,**

இந்த புதிய மாதம் நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைவதாக. கடந்து வந்த ஒவ்வொரு மாதங்களும் ஆண்டவர் நம்மை வழி நடத்தி வந்த கிருபைகளை நினைத்து நன்றி கூறுவோம்.

இந்த மாதத்தில் சிந்திக்கும் படியாக தெரிந்து கொள்ளப்பட்ட வேத வசனம் "...... உங்களைச் நிந்திக்கிறவர்களுக்காகவும். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காவும் ஜெபம் பண்ணுங்கள்." (மத் 5:44)

நமது ஆண்டவர் இந்த உன்னதமான போதனையை நமக்கு அருளிச் செய்தது மாத்திரமல்ல, அதனை நமக்கு முன்மாதிரியாக தமது வாழக்கையில் வாழ்ந்து காட்டினார் நமது ஆண்டவரை சிலுவையில் உயர்த்தி வைத்திருந்த வேளை, அகோரமான பாடுகளை அனுபவித்த வேளை, பாடுகளின் உச்சக்கட்டத்தை அவ்வேளையில் அனுபவித்துக் கொண்டிருந்தார். இந்த வேளையிலும் சாபமான வார்த்தைகள் எதுவும் அவர் வாயிலிருந்து வெளிவரவே இல்லை.

"பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக் 23:34) என்று பிதாவை நோக்கி ஜெபித்ததையே நாம் காண்கின்றோம்.

அவ்வாறே முதல் இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவான் தன்னைக் கல்லெறிந்து கொல்லுகிற மக்களுக்காக முழங்காற்படியிட்டு "..... இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" (அப் 7:60) என்று மிகுந்த சத்தமிட்டு ஜெபித்ததையே நாம் காண்கின்றோம் ஸ்தேவான் செய்த இந்த ஜெபம் அருகில் நின்ற மக்களை அசைத்திருக்க வேண்டும் அவன் அருகில் நின்றவர்களில் பரி. பவுல் அப்போஸ்தலனும் உள்ளத்தில் ஊடுறுவிப்பாய்ந்து கரியை செய்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதைப் போன்றே ஆதி அப்போஸ்தவர்கள் தங்கள் ஊழியத்தை நிறைவேற்றும் வேளையில் மிகுந்த பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அப்போதும் அவர்கள் தங்களைத் துன்பப்படுத்தினவர்களுக்காக ஜெபித்தார்களேயன்றி, அவர்களைச் சபிக்கவில்லை.

பரிசுத்த வேதாகமத்தை அதின் மூல மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததற்காக 'வில்லியம் டிண்டேல்' என்பவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 1536ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ம் நாள் காலை வில்லியம் டிண்டேல் ஆலய பிரமுகர்கள் மற்றும் அநேக பாதிரியார்கள் முன்னிலையில் மரண தண்டனை நிறை வேற்றப்பட்டது. தூக்கிலிடுபவன் (Hang Man) டிண்டேலை நாட்டப்பட்ட ஒரு மரத்தில் கட்டி அவரைக் கொன்றுபோடும் முன்னர் தன் மரண வேளையிலும் ஆர்வம் குறையாதவராக, தேவனே! இங்கிலாந்து மன்னரின் கண்களைத் திறந்தருளும்! (Lord, Open the king of England’s eyes) என்ற மிக சுருக்கமான ஜெபத்தை ஏறெடுத்தார். அவரைக் கொன்ற பின்னர் அவரைத் தீயிட்டு எரித்து சாம்பலாக்கினர். அவரது இறுதி ஜெபத்திற்குப் பலனாக 1604ம் ஆண்டே ஆங்கில வேதாகமத்தை உருவாக்க இங்கிலாந்து மன்னர் ஜேம்ஸ் முன் வந்தார். 1611ம் ஆண்டு ஆங்கில வேதாகமம் வெளியிடப்பட்டது.

நாமும் நமக்கு முன்பாக வாழ்ந்த பக்தர்கள், பரிசுத்த வான்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவோம். எல்லாவற்றிற்கும் மேலாக நமது அருள்நாதர் இயேசு இரட்சகரின் முன்மாதிரியைப் பின்பற்றி நம்மை நிந்திக்கிறவர்களுக்காகவும், நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபித்து, நமது உயரிய கிறிஸ்தவப் பண்பை வெளிப்படுத்துவோம். ஆண்டவரின் திருப்பெயரை மகிமைப்படுத்துவோம். நமதாண்டவர் தாமே அதற்கேற்ற கிருபைகளையும், பெலனையும் நமக்கு அருளிச் செய்வாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்

**REV. V.SAMUEL JEBARAJ**

## STORY FOR THE MONTH

Ann Judson ***(1789-1826)*** - "1st American Woman Missionary"

Many of her friends and neighbors thought Ann was wild and romantic when she went off to India in 1812. It was unthinkable then that a young woman would travel to some little known spot on the globe to work among the heathen in primitive surroundings. It meant leaving behind her family with little hope of seeing them again in this world. But Ann Hasseltine Judson insisted on going; she knew this was the work God had called her to do.

Ann Hasseltine was born in Bradford, Massachusetts the same year the young United States began its government under the Constitution 1789. When she was a teenager Ann accepted Christ as her Savior and began to spend time in Bible study and prayer. She wanted to be used by God and prayed, Direct me in Thy service, and I ask no more. I would not choose my position of work, or place of labor. Only let me know Thy will, and I will readily comply.

What A Honeymoon!

By 1810, when she was 21, Ann wanted to become a missionary to foreign lands. So did the Congregational minister named Adoniram Judson that she married on February 5, 1812; the next day, the newlyweds sailed from Salem, Massachusetts for Calcutta, India! Six other missionaries were also sent to Calcutta. At that time the government in India and the East India Company were opposed to missions, and they were soon ordered to leave the country. So the Judsons began their missionary work in Burma, located between India and China. The gospel had never reached that land of over 15 million people, and Ann prayed, O thou Light of the world, dissipate the thick darkness which covers Burma, and let thy light arise and shine. O display thy grace and power among the Burmese. Subdue them to thyself, and make them thy chosen people.

The Judsons settled in Rangoon, the principle seaport of Burma, and began learning the language. There were no rapid conversions, but Ann and Adoniram were "sensible that the hearts of the heathen, as well as those of Christians, are in the hands of God, and in his own time he will turn them unto him." The Burmans frequently told the Judsons, "Your religion is good for you, ours for us." The missionaries hoped the lives they lived would convince the Burmese people that Christianity was good for them as well. Even so, there were only eighteen converts after nine years in Rangoon.



Ann and Adoniram learned the Burmese language and translated the Scriptures. The Burmans had no idea of a God who was eternal, without beginning or end, and it was difficult to find words to accurately describe the Christian truths. Nevertheless, within three years the Judsons had prepared a Burmese grammar, printed two tracts, and translated the gospel of Matthew. Ann had formed a society of native women who met together on Sundays to pray and read the Scriptures.

Home to Recoup and Recruit

In spite of difficult living conditions, Ann came to love Burma as a place where she had learned much of the Lord' s mercy and grace. It was difficult for her to leave her adopted land in 1822, when a severe liver problem forced her to return to America. While in America, Ann wrote a history of the Burmese mission that was widely read in America and encouraged many to become missionaries. Ann awakened many to the conditions of the Burmese women and the importance of female missionaries working among them.

When Ann returned to her home in Rangoon in 1823, war between Britain and Burma was threatening. When war did break out, the Burmese thought the Americans to be associates of the British, and Adoniram was thrown into death prison. Ann, then two months pregnant, became a prisoner in the inner room of her own house. She valiantly pled with government officials for her husband' s life and was secretly able to bring supplies and food to Adoniram and his fellow prisoners.

Stand By Your Man

Shortly after their daughter was born, Adoniram caught a tropical fever. Ann devotedly cared for him from a small hut near the prison gate. One night, however, Adoniram was moved secretly to another prison. He was forced to walk barefoot eight miles over sand and gravel. The soles of his feet were raw flesh, and he was near death when he finally arrived at Oung-pen-le. Ann took her three-month-old daughter and followed after her husband. She was able to share a room with the jailer and his family, but became seriously ill herself from both smallpox and spotted fever. Ann later wrote her brother: The acme of my distress,

consisted in the awful uncertainty of our final fate. My prevailing opinion was, that my husband would suffer violent death; and that I should, of course, become a slave,...But the consolation of religion, in these trying circumstances, were neither ' few nor small!' It taught me to look beyond this world, to that rest, . . . where Jesus reigns and oppression never enters.

When Burma and the British made peace, Adoniram was released and united with his wife and infant daughter. Ann, however, was still weak. She died of a fever on October 24, 1826. Her daughter died within six months. Ann Hasseltine Judson was the first woman missionary to leave America; her story of constant love for Christ encouraged many other women to serve Christ on the mission field.

**Staying on**

**In spite of his suffering at the hands of the Burmans, Adoniram stayed in Burma to bring the gospel of Christ to the people. After twenty-four years he completed a translation of the entire Bible into Burmese. By the time of his death in 1850, Burma had sixty-three churches with 163 missionaries and native church leaders.**

## BIRTH OF A SONG

*(Welsh missionary – "I HAVE DECIDED TO FOLLOW JESUS")*

About 150 years ago, there was a great revival in Wales, England. As a result of this, many missionaries came from England to northeast India to spread the Gospel. The region was known as Assam and comprised hundreds of tribes. The tribal communities were quite primitive and aggressive. The tribesmen were also called head-hunters because of a social custom which required the male members of the community to collect as many heads as possible. A man's strength and ability to protect his wife was assessed by the number of heads he had collected. Therefore, a youth of marriageable age would try and collect as many heads as possible and hang them on the walls of his house. The more heads a man had, the more eligible he was considered. Into this hostile and aggressive community, came a group of Welsh missionaries spreading the message of love, peace, and hope of Jesus Christ. Naturally, they were not welcomed. One Welsh missionary finally succeeded in converting a man, his wife, and two children. This man's faith proved contagious and many villagers began to accept Christianity. Angry, the village chief summoned all the villagers. He then called the family who had first converted to renounce their faith in public or face execution. Moved by the Holy Spirit, the man sung his reply, **"I have decided to follow Jesus. No turning back."**

Enraged at the refusal of the man, the chief ordered his archers to arrow down the two children. As both boys lay twitching on the floor, the chief asked, "Will you deny your faith? You have lost both your children. You will lose your wife too."

But the man replied, again singing, **"Though none go with me, still I will follow. No turning back."**

The chief was beside himself with fury and ordered his wife to be arrowed down. In a moment she joined her two children in death. Now he asked for the last time, "I will give you one more opportunity to deny your faith and live."

In the face of death the man sung, **"The cross before me, the world behind me. No turning back. No turning back."**

He was shot dead like the rest of his family. But with their deaths, a miracle took place. The chief who had ordered the killings was moved by the faith of the man. He wondered, "Why should this man, his wife and two children die for a Man who lived in a far-away land on another continent some 2,000 years ago? There must be some supernatural power behind the family, and I too want that supernatural power."

In a spontaneous confession of faith, he declared, "I too belong to Jesus Christ!" When the crowd heard this from the mouth of their chief, the whole village accepted Christ as their Lord and Savior.

***I HAVE DECIDED TO FOLLOW JESUS***

**I have decided to follow Jesus (3x)**
**No turning back, no turning back**

**Though none go with me, still I will follow (3x)**
**No turning back, no turning back**

**The world behind me, the cross before me (3x)**
**No turning back, no turning back.**

DIOCESE OF TIRUNELVELI

BETHESDA C.S.I. TAMIL CHURCH

PUNE

## ARTICLES FOR THE MONTH

### ‘சுய ஆதாயம் தேடும்’ ராட்சதன் கொல்லப்படுவதே, கிறிஸ்தவ ஜெய வாழ்க்கை!

*- சகரியா பூணன்*

*மார்ட்டின் லூத்தர், ஜான் வெஸ்லி, சார்லஸ்ஃபின்னி, ஜோஹன் ஒ.ஸ்மித், வாட்ச்மேன் நீ ஆகியோரின் சுயசரிதையில் அவர்களைத் தேவமனிதர்களாக நிலை நிறுத்தியதெல்லாம், எண்ணிப் பார்த்து கணக்கிடும் உபதேசங்கள் அல்ல! மாறாக, அவர்கள் யாவரும் தங்களுக்குச் சொந்தமானதைத் தேடவில்லை என்ற தெய்வீக குணாதிசயமேயாகும்!! வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த இவர்கள் ஒவ்வொருவரும், தங்களுக்கு முன்பான நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களைக் காட்டிலும் அதிகமான “தூய உபதேசத்தை” அறிந்திருந்தார்கள் என்பது உண்மைதான், அதில் எவ்வித சந்தேகமும் இல்லை!! இருப்பினும், அவர்களின் ஆவிக்குரிய தன்மையானது, தங்கள் சந்ததியில் அவர்கள் வாழ்ந்த நாட்களில் பெற்ற வெளிச்சத்தின்படி, தேவனுடைய ராஜ்ஜியத்தை* **“சுயநலமின்றித்”** *தேடினார்கள் என்பதிலேயே அடங்கியிருக்கிறது!!*

*கோபம், பாலிய இச்சை முதலானவைகளைச் ஜெயிப்பதில்தான் நீதி அடங்கியிருக்கிறது என நீங்கள் எண்ணுவீர்களென்றால், நீங்கள் மாபெரும் அபாயத்தில் இருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! பௌத்த பிட்சுகள்கூட இப்பாவங்களை ‘வெளிப்பிரகாரமாக’ ஜெயித்தே வாழ்கிறார்கள். ஒருசமயம், புத்தர் இவ்வாறாக கூறினார்: “என்னை யாரேனும் தூண்டி கோபம்கொள்ளச் செய்வது ஒருக்காலும் முடியவே முடியாது” என்றார். பாருங்கள், இதுதானா கிறிஸ்துவின் நீதி? நிச்சயம் இல்லை! இது ஓர் நல்ல புத்த சன்மார்க்கம்!! அவ்வளவுதான்.*

**நம் மாம்சத்தில் குடிகொண்டிருக்கும் எல்லாப் பாவங்களையும், இஸ்ரவேலுக்கு எதிராகத் தன் தலைவன் கோலியாத்திற்குப் பின்னால் நின்ற பெலிஸ்தியர்களுக்கே ஒப்பிடலாம். ஆம், இந்த கோலியாத்தே “தன் சுய - ஆதாயம் தேடும்” ராட்சதன்! தாவீது, இப்பெலிஸ்திய வீரர்களை ஒருவர்பின் ஒருவராகக் கொல்ல ஆரம்பித்திருப்பானென்றால், அதற்கு முடிவில்லாத பல வருடங்கள் ஆகியிருக்கும். அவன் ஜெயம் பெற்றிருக்கவே முடியாது! ஆனால் நடந்த விந்தை யாதெனில், தாவீது கோலியாத்தைக் கொன்றவுடன், மற்ற எல்லா பெலிஸ்தியர்களும் ஓடிப்போனார்கள் என்று வாசிக்கிறோமே! *(1 சாமு.17:51).* இதுதான் ரகசியம்!!**

*நாமும் உண்மையான ஜெயம் பெற வேண்டுமென்றால், நம் முழு தாக்குதலையும் இந்த* **“தனக்கு சொந்தமானதைத் தேடும்”** *ராட்சதன் மீதே தொடுத்திடவேண்டும். அப்போது, மற்ற எல்லாப் பாவங்களும் தானாகவே ஜெயிக்கப்பட்டுவிடும்!!*

*கோடாரியை, மரத்தின் வேர்மீது வீசி வெட்டும்படியே இயேசு வந்தார். இம்மரத்தின் கனிகளோ, பொய் சொல்லுதல், திருடுதல், இச்சித்தல், கோபம், கசப்பு....... இப்படி ஏராளம், ஏராளம்! ஆனால், இவை எல்லாவற்றிற்கும் வேராக இருப்பதெல்லாம் “தனக்கு சொந்தமானதைத் தேடுதல்” என்ற ஒன்று மாத்திரமே!! இங்குதான் கோடாரியானது வீசப்படவேண்டும். அப்படி இல்லாவிட்டால், நாம் நிச்சயமாய் வஞ்சிக்கப்படுவோம்!*



***Welcome articles for Mag.,***
***contactus@csitamilchurchpune.org***
***1page/250words***
***by 15th Nov’16***

DIOCESE OF TIRUNELVELI

# BETHESDA C.S.I. TAMIL CHURCH

PUNE

## BIBLE QUIZ FOR THE MONTH

## வேதாகமப் பகுதி : இணைச்சட்டம் (உபாகமம்) 1 லிருந்து 17 வரை

1. மண்ணிலுள்ள எல்லா மக்களினங்களிலும் உங்களையே தம் சொந்த மக்களாக கடவுளாகிய ஆண்டவர் தேர்ந்துக்கொண்டார். ஏன் ?

- ☐ எல்லா மக்களிலும் நீங்கள் திரளானவர்கள் என்பதால்
- ☐ எல்லா மக்களிலும் நீங்கள் சொற்பமானவர்கள் என்பதால்
- ☐ உங்களிடம் அன்பு கூர்ந்ததாலும், மூதாதையருக்கு ஆணையிட்டு கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்பதால்

2. மனிதர் ___________ மட்டுமன்று , மாறாக கடவுளின் __________ஒவ்வொன்றாலும் உயிர் வாழ்கின்றார்.

- ☐ அப்பத்தினால், வாய்ச்சொல்
- ☐ வாய்ச்சொல், கட்டளை
- ☐ மன்னாவால், வாய்ச்சொல்

3. கடவுளாகிய ஆண்டவர் நீங்கள் இப்பொழுது இருப்பதைவிட ___________ உங்களைப் பெருகச் செய்வாராக!

- ☐ 100 மடங்கு
- ☐ 1000 மடங்கு
- ☐ 10 மடங்கு

4. உங்கள் கடவுளாகிய ஆண்டவர் வேற்றுத்தெய்வ வழிப்பாட்டை ___________ கடவுள்

- ☐ சகிக்காத
- ☐ விரும்பாத
- ☐ வெறுக்கிற

5. இரத்தத்தை நீங்கள் அருந்த வேண்டாம்..தண்ணீரை ஊற்றுவது போல அதை தரையிலே ஊற்றிவிடுங்கள். ஏன் ?

- ☐ சதையோடு இரத்தத்தை சேர்த்து உண்ணக்கூடாது என்பதால்
- ☐ இரத்தத்தை ஆண்டவரின் பீடத்திலே ஊற்றிவிடுவதால்
- ☐ இரத்தமே உயிர் என்பதால்

6. ___________ ஆண்டுகளும் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களோடு இருந்துள்ளார்

- ☐ 70 ஆண்டுகள்
- ☐ 430 ஆண்டுகள்
- ☐ 40 ஆண்டுகள்

*7. உண்ணத்தகும் விலங்குகள் எவை ? எவை ? என்று வாசிக்கிறோம்.* ***(தவறான பதிலை மட்டும் தேர்வு செய்யவும்)***

- ☐ *மாடு*
- ☐ *ஒட்டகம்*
- ☐ *வெள்ளாடு*
- ☐ *காட்டுமான்*
- ☐ *சிறகும் செதிலும் உள்ள விலங்குகள்*

*8. அரசனுக்கான விதிமுறைகள் எவை ? எவை ?*
*1. ஆண்டவர் தெரிந்தெடுக்கும் ஒருவனையே உன் அரசனாக ஏற்படுத்த வேண்டும். 2. உன் இனத்தான் ஒருவனையே உன் அரசனாக ஏற்படுத்த வேண்டும். 3. மீண்டும் மக்களை எகிப்துக்கு போகச் சொல்லாத ஒருவனையே அரசனாக ஏற்படுத்த வேண்டும். 4. ஆண்டவரை விட்டு விலகாத இதயம் உடையவனையேஅரசனாக ஏற்படுத்த வேண்டும். 5. வெள்ளியும்,பொன்னும் அளவுமீறிச் சேர்க்காதவனையேஅரசனாக ஏற்படுத்த வேண்டும்.*

- ☐ *1,2,3,4*
- ☐ *1,3,5*
- ☐ *1,2,3,4,5*
- ☐ *2,4, 5*
- ☐ *1,5*

*9.யோர்தானுக்கு கிழக்கே குறிக்கப்பட்ட அடைக்கல நகர்கள் எத்தனை ?*

- ☐ *3*
- ☐ *6*
- ☐ *12*

*10. என்மீது அன்புக் கூர்ந்து என் கட்டளைகளைக் கடைப்பிடிப்போர்க்கு ______________ தலைமுறைக்கும் பேரன்பு காட்டுவேன்.*

- ☐ *10 தலைமுறை*
- ☐ *1000 தலைமுறை*
- ☐ *3 தலைமுறை*

*11. ஒரு ஆண்டில் எத்தனை முறை உன் ஆண்மக்கள் அனைவரும் கடவுளாகிய ஆண்டவர் தெரிந்தெடுக்கும் இடத்தில் அவர் திருமுன் வரவேண்டும்*

- ☐ *3 முறை*
- ☐ *6 முறை*
- ☐ *5 முறை*

*12. அவர்களைவிட வலிமையிலும் எண்ணிக்கையிலும் மிகுதியான மக்களினமாக உன்னை ஆக்குவேன். இது யார் கூற்று ?*

- ☐ மோசே
- ☐ ஆரோன்
- ☐ ஆண்டவர்

*13. அரக்கர்களில் பாசானின் மன்னனாகிய ஒகுவின் இரும்புக் கட்டில் எத்தனை முழ நீளமும், எத்தனை முழ அகலமும் கொண்டது என்று வாசிக்கிறோம்*

- ☐ 9,4
- ☐ 8,7
- ☐ 6,4

*14. லேவியர்களின் உரிமைச் சொத்து யார் ?*

- ☐ அவர்கள் சகோதரர்களே
- ☐ இஸ்ரயேலர்
- ☐ ஆண்டவரே!

*15. உங்கள் கடவுளாகிய ஆண்டவர் கண்காணிக்கும் நாடு! கண்காத்திடும் நாடு எது ?*

- ☐ மலைகளும், பள்ளத்தாக்குகளும் நிறைந்த நாடு
- ☐ பாலும், தேனும் நிறைந்து வழியும் நாடு
- ☐ வானத்தின் மழைநீரையே குடிக்கும் நாடு

***Send the Answers to***
***contactus@csitamilchurchpune.org***
***And win fabulous prizes***
***by 15th Nov'16***